Eelakesari Educational Supplement

ஓம்

விலை சதம் 3

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

“கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக”

புத்தகம் 2 } சுன்னாகம்: வெகுதானிய ஹூ பங்குனி மீ உஎஉ (9-4-39) { இல. 25

## கல்விச் சிக்கனம்

சிக்கன சபையாருடைய கல்விச் சிக்கன முறைகளை வித்தியா சங்கம் ஏற்றுக்கொண்டது. வித்தியா நிர்வாக மந்திரி சபையும் ஏற்றுவிட்டதென நம்பக்கூடியதாக விருக்கின்றது. தலைமையாசிரியர்கள் சங்கம் சிக்கன சபையாரோடு கலந்ததனால், ஒரு பயனும் ஏற்படாது போயிற்று. உபாத்தியாய உலகத்திற்கு நெருக்கடியான காலம் சமீபித்துவிட்டது என்று துணிபாகக் கூறலாம்.

சிக்கன சபையாருடைய முறைகள் இலங்கையின் கல்வி நிலையைக் கீழ் நிலைக்குக் கொண்டு வரக்கூடியனவாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் படிப்பிக்கும் உபாத்தியாயர்கள் தொகை ஏறக்குறைய அரைப்பங்கு குறைவடையும். பெரும்பாலும் ஒவ்வொரு உபாத்தியாயரும் இவ்விரண்டு வகுப்புக்களைப் படிப்பிக்க நேரிடும். ஒவ்வொரு வகுப்பிலும் ஐம்பத்தைந்து பிள்ளைகள்வரையில் இருக்கலாம். ஆங்கிலத்தில் பீ. ஏ. பட்டதாரிகளுக்கு ரூபா. 50 தொடக்கம் ரூபா. 100 வரையில் சம்பளம் விதிக்கப்பட்டிருக்கிறது.

உபாத்தியாயர்கள் எத்தனையோ வருடகாலமாகக் கஷ்டப்பட்டு தங்கள் நிலையை உயர்வடையச் செய்ததெல்லாம் வீணாகப் போகப் போகின்றது. குறைந்த சம்பளம், கூடியவேலை முதலிய குறைகளின்றி இருந்த உபாத்தியாயர்களின் வருங்கால நிலைமை மிகப் பரிதாபமாக விருக்கின்றது. சிக்கன முறை கையாளப்படுமாயின், நூற்றுக் கணக்கான ஆசிரியர் வேலையின்றி இருப்பார்கள். பத்து வருஷ எல்லைக்குள் எப் பள்ளிக்கூடத்திலாவது வேலைக் கிடங் கிடைக்குமென்பது சந்தேகம்.

பிள்ளைகளுக்குப் பெருந்தொகைப் பணம் செலவு செய்து, உயர்தரக் கல்வி கற்பிப்பவர்கள் இனிக் கற்பியாது விட்டுவிடுவார்கள் என்பது திண்ணம்.

இந்த நெருக்கடியான சமயத்தில் நமக்கு நன்மை செய்ய வல்லவர்கள் நமது அரசாங்க சபை அங்கத்தவர்களே. அவர்கள் எல்லோரும் மௌனமாயிருக்கிறார்கள். நோக்கம் யாதென அறியோம். சிக்கன சபையாருடைய அறிக்கையைப் பூரணமாக ஏற்றுக்கொள்ளாது விடுதற்கு அரசாங்கசபைக் குரிமையுண்டு. அரசாங்கசபை உபாத்தியாயர்களுக்கு இடையூறுகள் ஏற்படாது, நன்மை புரிவார்கள் என்பது நமது நம்பிக்கை.

### ஆசிரியர் சங்கங்கள்

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள ஆசிரிய சங்கங்கள் தற்போதைய நெருக்கடியான சமயத்திலென்னதான் செய்கின்றனவென்பதை அறியேம். இலங்கையிலுள்ள ஆசிரியர்களெல்லோரும் ஒருங்கு சேர்ந்து, சிக்கன சபையாருடைய அறிக்கையைப் பூரணமாக எதிர்க்க வேண்டும். இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் கூட்டங்கள் கூடிச் சிக்கனசபைத் தீர்ப்புக்களைக் கண்டிக்கவேண்டும். ஆசிரியர்கள் ஒத்துழைப்பார்களாயின் வெற்றி பெறுதல் நிச்சயம். உபாத்தியாயர்களுள் அரசாங்கசபையில் திரு. நடேசபிள்ளையும், திரு. ஜயாவும் இருக்கின்றனர். இந்த நெருக்கடியான சமயத்தில் இவர்கள் உபாத்தியாயர்களை வெற்றியடையச் செய்ய முன் வருவார்களென்று நம்புகிறோம்.

# பாஷை

தாய்ப்பாஷையாக அன்னிய பாஷையாக யாதாயினும் ஒருபாஷையைக் கற்றலாவது பின்வருமாறு இருவகைத்தாம்.

A. ஒன்று அப் பாஷையைக் கற்றல், அதாவது அப் பாஷையை வழங்குதல் — வழங்கும் வழிகள் நாலு— (1) பிறர் பேசுவதைக்கேட்டு விளங்குதல், (2) தன் கருத்தை வெளிப் படுத்தித் தான் பேசுதல், (3)மற்றவர் எழுதியதை வாசித்துத் தான் விளங்குல், (4) தன் கருத்தை எழுதி வெளிப்படுத்தல் என்பனவாம்.

B. மற்றவகை அப்பாஷையைப்பற்றிய செய்திகளை (அதன் இயலை)ப் படித்தல், அதாவது அப் பாஷையின் அமைப்புமுறை முதலிய செய்திகள் பலவற்றையும் படித்தல் என்பது — (1) இச்செய்திகளுட் சில அப் பாஷையை நன்கு படித்தற்கு — பேசிப் பயின்று கொள்வதற்கு — துணையாயிருப்பன. (2) சிலசெய்திகள் உயர்தரபபடிப்புக்குரியனவாய்ச் சிலருக்கு மனங்களிகூரச் செய்வன, எனினும் பாஷையைப் பயின்று அறிதற்கு அவை மிக்க அவசியமானவை யல்ல என்ப. பாஷையைப் பற்றிய செய்தியே இலக்கணம் என்பது. அதனைப் படித்தலும் முற்கூறியபடி—1 உம் 2 – உம் – இரு வகைத்து.

பாஷையைப் பயின்று படிக்குங்கால் 1-ம் வகையாகிய இலக்கண விஷயங்களைப் பயிற்சியோடு ஒட்டிப் பாஷைப் படிப்புக்கு உதவியாக அவசியம் அறிதல் வேண்டும், தனிப்பாடமாக வேண்டா. இது பாடசாலையில் மாணவரது முதல் 4, 5 வருடகாலத்துக்கு உரியது —அதன்பின் இலக்கணம் ஒரு தனிப்பாடமாக 2-ம் வகையிற் குறிப்பிட்டபடி கற்பிக்கப் படற்பாலது.

ii. பஷை என்னும் பெரும் விஷயத்தில் அடங்கியுள்ள உபபிரிவுகள் வருமாறு.

A. பேச்சு: (1) பேசுதல் (2) கேட்க வாசித்தல் (3) உச்சரிப்பு

B. கண்வாசிப்பு (மௌன வாசிப்பு)—கண்பார்த்துள்ளத்தமைத்தல்

C. எழுத்து: (1)கையெழுத்து (2) எழுத்துக்கூட்டல், ஒழுங்குசெய்தல், குறியீடு. (3) கட்டுரை வரைதல்—அனுபவசித்தமான்முறையாய்(Practical), தானே யூகித்தாய் உண்டாக்கி எழுதல்.

இத்துறைகளிலெல்லாம் பயின்று அவற்றைச் செய்யும் ஆற்றல் பெறுதலே பயனும்.

iii. இலக்கணம் கற்றலின் பயன், — வீட்டில் வழங்கும் பேச்சைத் திருத்தவேண்டியதாயின் இலக்கணம் கற்றல் அநாவசியகம்—வீட்டுப் பேச்சு—சொல்வளம் பண்ணல் உபா. கடன் — வீட்டுப் பாஷையும் பள்ளிக்கூடப்பாஷையும் — மாணவரது பேச்சை முதலிலிருந்தே பயிற்றவேண்டிய சந்தர்ப்பம் — பேசிப் பயிலச்செய்தலே முறை.

பேச்சு வழக்கிலுள்ள ஒருபாஷையின் இருஅமிசங்கள் — கருத்தும், மொழியும் — கருத்து வாசிப்பினாலும் அனுபவத்தாலும் வரும்; கருத்தை வெளிப்படுத்தும் சொல் வல்லபம் காரியங்களை வெளிப்படையாகவும் தெளிவாகவும் சொல்லிப் பேசிப் பயிலுதலினால் வருவது.

“ செந்தமிழும் நாப்பழக்கம். வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்” என்பதும் நோக்குக.

இலக்கணத்தால் கருத்து வளமாவது சொல்வளமாவது வருவதின்று. பாஷை அல்லது பேச்சு முந்தியது; இலக்கணம் பிந்தியது. இலக்கணம் பேச்சைச் செப்பஞ் செய்வது. இலக்கண அறிவில்லாதவர் மொழிக்கணுள்ளதப்பு என்னது என்று சொல்லவும் மாட்டார். வரையறையில்லையாயின் ஒவ்வொருவரும் தத்தமக்கிசைந்தவாறு பேசி இடர்ப்படுவர் — வேறு அன்னிய மொழி கற்பார்க்கும் தம்மொழி இலக்கணம் பெரிதும் துணைச் செய்வது. தாய் மொழியேயாயினும் அதனை வருந்திக்கற்றல் அவசியம். இன்றேல் தம் முன்னோரழித்த முதுசொம் நமக்கு இல்லையாகும்.

iv. இலக்கணக்கல்வி பாடசாலைகளில் ஏன்வெறுப்புக்குரிய பாடமாயிற்று. பாஷையைப்படித்து அறிந்து நிபுணராதற்கு இலக்கண அறிவு வேண்டியதின்று என்பர் ஒருசாரார். கற்போரும் கற்பிப்போரும் இதனை ஏன் வெறுத்து ஒதுக்குவாராயினர் — காரணத்தை விசாரித்தால் குறையை நீக்கலாம். — இக்கால நிபுணரது கொள்கை, — பிள்ளை ஒன்றைப்பற்றித் தொடர்புறச் சிந்திக்கவும், தன் சிந்தனைகளைத் தடையின்றித் தெளிவாய் எடுத்துச் சொல்லவும் வல்ல சக்தியைப் பெறுதற்குமுன் பாஷையின் இயல்பு, தன்மை, என்பவற்றை வேறாகப் பிரித்தெடுத்து ஆராய்வதாகிய இலக்கணக் கல்வியைப் படித்தற்கு ஒருவித தகுதியும் அல்லது ஆதாரமும் அப் பிள்ளைக்கு இல்லையாகும், என்பது பாஷையைப் பயின்று அறியாதார்க்கு இலக்கணம் எதற்கு. சிரேஷ்டபாடசாலை மாணவர்க்கே இலக்கணம் கற்பிக்கற் பாலது — இது பழைய தமிழ் ஆசிரியர்களது கொள்கை.

“ இலக்கியங்கண்டு அதற்கு இலக்கணம் இயம்பல்” என்றார், நன்னூலார். “இலக்கியத்தினின்று எடுக்கப்படும் இலக்கணம்,” “ எள்இன்றாயின் எண்ணெயுமின்று” என்பனவும் நோக்குக, இலக்கியப் பயிற்சி நிரப்பப்பெற்ற பின்னரே இலக்கணம் படித்தல் முந்தையோர் மரபு — அதனைக் கைவிட்டு முறைமாறாக— பத்துச் செய்யுள் தானும் படித்தறியாதார்க்கு இலக்கண விதிகளைப் படிப்பிக்கத் தொடங்கியதே இப்பாடம் மாணவர்க்குக் கசப்பாயினமைக்கு ஒரு காரணம், பேச்சோடும் இலக்கியத்தோடும் தொடர்பு படுத்தாது இலக்கணமென ஒன்று தனியாகவைத்துப் படிப்பித்த முறைகேடும் மற்றொருகாரணம். ஆரம்ப வகுப்புகளில் மொழியை நன்குபயின்று சொல்வழம் நிரம்பிய பின்னர் மேல்வகுப்புகளில் இலக்கணம்.

வாக்கு மனமற்ற மவுனிமவு னத்தருளே, தாக்கவும்என் அல்லலெல்லாந் தட்டழிவ தெந்நாளோ.

V. பாடசாலை மாணவர் கற்கவேண்டிய இலக்கணம்:—

அதனைப் படித்தால் அவர் சொல்வகைகளையும், சொன் முடிபுகளையும், சொல் தொடர்களையும் அறிந்து வாக்கியப் பொருளை நன்கு விளங்கிக் கொள்ளுதற்கு அது ஏற்ற துணையாயிருத்தல் வேண்டும்.

தமிழ் சொற்களின் ரூபத்தைக் கொண்டு பொருள் சொல்லலாவது இன்னவகைச் சொல் என்றாவது சொல்லல் கூடாது—வாக்கியத்தில் வருந் தொடர்பு பற்றியும் நிலைபற்றியும் ஒரு சொல்லே வேறு வேறு வகைச் சொல்லாகும். ஒரு சொல்லுத்தானே தான் நின்ற நிலையில் இரண்டுவகைச் சொல்லாகத் தொழில் செய்யும். ஒரு சொல் வசனத்தில் நின்று செய்யுந் தொழிலைக் கொண்டே அது என்னவகை என்று அறியலாம். அதன் உருவத்தை நோக்கியன்று—ஒரு சொல்லினது பொருளையும் தொழிலையும் நோக்கியே அதற்கு இலக்கண முடிபு கூறல் முடியும். ஆசிரியர் இப் பாடத்திட்டத்தை அமைக்கும் போது இதற்கு அத்திவாரமாய் விளங்கும் மூன்று அம்சங்களையும் தெரிந்துகொண்டு அமைக்க. அவை:—(1) சொல், சொற் பொருள், சொல்லாக்கம், (2) சொன் முடிபு (3) சொற்றொடர் என்பன—அதனால் வாக்கியத்தின் அமைப்பு விளங்கும்—வெறும் இலக்கணப் பரிபாஷைச் சொற்களையும் விதிகளையும் படித்தல் வேண்டா.

vi. தாய்மொழிப் பயிற்சிக்கு கருவியாகிய

பேச்சு, வாசித்து விளங்குதல், எழுதுதல், என்பன முதலில் நன்றாக அமையச் செய்தல் வேண்டும். முதல் 4, 5 வருடகாலமும் கேள்வியினாலும் வாசிப்பினாலும் பேச்சு திருந்துதல்—சொற்களையும் தொடர்களையும் வைத்து வாக்கியம் இயற்றுதல், கதை சொல்லல் முதலியனவாய் மொழி முறையாகச் செய்யப்படுதல் வேண்டும். கீழ்ப்பிரிவு முதல் சிரேஷ்ட வகுப்பு ஈறாகவுள்ள எல்லா வகுப்பிலும் இப்பயிற்சி நடைபெறுதல்—தொடர்ந்து அணிபெறப் பேசுதல்—இப்படிப் பேசினவற்றை எழுதுதல்—கட்டுரைகள் வாய்மொழியாகச் சொல்லுதல்—இதனால் நாவன்மை உண்டாகும்.

வாசிப்புப் புத்தகங்களை விட வேறு பல புத்தகங்களை எடுத்து வாசித்துப் பயிலல்—பாஷை திருந்தும். சொல்வளம் பெருகும்—கீழ்வகுப்பு முதல் மூன்றாந்தரம் முடியவுள்ள வகுப்பு மாணவர் இவ்வாறு பிழையில்லாமல் சுத்தமான பாஷை பேசப்பயின்று கொள்வர். இவர்க்குத் தனியே இலக்கணமென்று ஒரு பாடமில்லை. நாலாந்தரத்திலும் ஐந்தாந்தரத்திலும் இவ்வாறே பேச்சும் வாசிப்பும் என்பவற்றோடு சாரவைத்துச் சில செய்திகள் விளங்கி அறிந்து கொள்ளச் செய்யலாம், செய்யுள்களது வகைகளையும் அறியலாம். செய்யுள் நடையை நோக்கவும் அதன் கண்ணமைந்த தாளக்கட்டாகிய சீர்களையும் ஓசை வேறுபாடுகளையும் காதினால் உற்றுக்கேட்டு அறிந்து இன்புறச் செய்யலாம். செய்யுட்களில் வரும் மோனை எதுகைத் தொடை நயங்களை யறியலாம்.

## சிங்கள நீதிக் கதைகள் 2

# தர்மம் வெற்றியடைகிறது.

வ. ந.

தர்மசீலர்கள் மிகுந்த கிராமமொன்று இருந்தது. அந்தக்கிராமத்திற்குத் தர்மபால கிராமமென்றே பெயர். அக்கிராமத்திலே தர்மபாலகுடும்பத்திலே தர்மபாலனென்றொருவன் இருந்தான். அவன் கல்வி கற்பதற்காகப் பிறதேசத்திற்கு அனுப்பப்பட்டான்.

மிகுந்த திறமை வாய்ந்தவன்; பாடசாலை முழுவதிலுமே அவன் பெரிய கெட்டிக்காரன். ஆசிரியர்களும் மாணவர்களும் இவன் மேல் மிகுந்த அன்பு கொண்டிருந்தனர்.

ஒரு நாள், ஆசிரியரது ஏகபுத்திரன் — அருமைப் புதல்வன இறந்துவிட்டான். எல்லாரும் அங்கு சென்றார்கள். தர்மபாலனும் அங்கு சென்றான். எல்லாரும் வாயிலும் வயிற்றிலுமாக அடித்துக்கொண்டு அழுதார்கள். தர்மபாலன் வேடிக்கைபார்த்துச் சந்தோஷப் படுவது போன்று சிரித்துக் கொண்டிருந்தான். எல்லோருடைய கவனமும் தர்மபாலனின்மேல் விழுந்தது. அதிசயப் பட்டார்கள். சிரித்ததன் காரணம் யாதென விசாரித்தார் ஆசிரியர். தங்களுடைய சந்ததியிலே இதுவரை ஒருவராவது இப்படி இளம் வயதிலே இறக்கவில்லையென்றும், வயதுவந்துதான் இறப்பார்களென்றும், இங்குமாத்திரம் இப்படிப் புதினமான செயல் நடந்ததால்தான் சிரித்ததென்றும் கூறினான் தர்மபாலன். எல்லாரும் பெரிய அதிசயமடைந்தார்கள்.

நாட்கள்சில சென்றன. ஆசிரியர் தம்மாணவர்களுக்குத் தலைவனாகத் தர்மபாலனை நியமித்துவிட்டுத் தேசாந்தரம் செல்வதாகக் கூறினார். ஆட்டு எலும்புகளை எடுத்து மூட்டையாகக் கட்டிக்கொண்டு தர்மபால கிராமத்துக்குச் சென்றார் ஆசிரியர். தர்மபாலனது வீட்டுக்குச் சென்றார். தர்மபாலனது தகப்பனார் உபசாரஞ் செய்து வரவேற்றார். வந்த காரணத்தையும் தன்மகன் தர்மபாலனது சுகத்தையும் கூறும்படி வேண்டினார் ஆசிரியரை. ஆசிரியர் துக்கமுடையவர்போலப் பாவனை செய்து "உன் மகன் இறந்துவிட்டான். அதைத் தெரிவிக்கவே வந்தேன். என்மகனை இழந்த துக்கத்திலும் கூடிய துக்கமாகவே எனக்கு இருக்கிறது." எனக்கூறினார். இக்கதையைக் கேட்டவர்களெல்லோரும் வயிறு குலுங்கக் குலுங்க நகைத்தார்கள். ஆசிரியர் மனம் வேதனை மிக்கது. மனஆத்திரத்துடன் "என் சிரிக்கிறீர்கள்? தர்மபாலனுடைய எலும்புகளும் இதோ இருக்கின்றன" வென்று மூட்டையைச் சுட்டிக் காண்பித்தார். எல்லோரும் மறுதரமும் அப்படியே சிரித்தனர்.

"என்மகன் இறக்கவில்லை. உயிரோடுதான் இருக்கிறான். அவனுடைய எலும்புகள் இவைகளல்ல. இவை ஆடு மாடுகளுடைய எலும்புகள், நீங்கள் சொல்

(தொடர்ச்சி 198-ம் பக்கம் பார்க்க)

# வீரத் தாய்மார்

பூமகள் மாண்பு பொலிந்து விளங்கும் இந்நில உலகின் கண்ணே தோன்றிய மங்கையர்களுள் அச்சம் சிறிதுமின்றி அஞ்சாநெஞ்சம் படைத்த மாதர் வீரத் தாய்மாரென அழைக்கப்படுவர். வீரத்தாய்மார்களுடைய சரிதைகளைப் பண்டைய தமிழ் நூல்கள் எமக்குச் சிறிது அறிவுறுத்துகின்றன. அன்னார் செய்த செயற்கருஞ் செயல்கள் தற்காலத்துள்ள ஆண்கட்குப் பெரிதும் அதிசயத்தைக் கொடுக்கின்றன.

முற்காலத்திலுள்ள பெண்மக்கள் கற்புடை மங்கையர்களாயிருந்தமையினால் அச்சம் சிறிதுமின்றி வாழ்ந்து வந்தார்கள். அன்னார் தம் நாயகனையோ அல்லது தம் பிள்ளைகளையோ நாட்டு நன்மை கருதிப் போர்க்கனுப்பச் சிறிதும் மனச் சஞ்சலம் கொள்ளாமற் தயாராயிருந்தார்கள் என்றால் அன்னோர் வீரத்தைப் பகரவும் வேண்டுமோ? ஆதியிலிருந்த பெண்ணமிர்தங்கள் போர் வந்துற்ற காலை தாமும் முன் சென்று படையணி வகுத்துப் போர் புரிந்து வெற்றி பெற்றனர் என்று சில தமிழ் நூல்கள் கூறுகின்றன. உதாரணமாகப் பிரான்சு தேசத்திருந்த "ஜோன் ஒப் ஆக்" என்னும் பெண் தன் நாட்டைப் பகைவர் சூழ்ந்து கொண்டதையறிந்து படையணி வகுத்துப் போர்க்குச் சென்றாளென உலக சரிதையிலிருந்து அறிகின்றோம்.

இன்னும்: ஓர் வீரத்தாய் தன் மகனைப் பார்த்து "அப்பா! என் மகனே, நானீன்ற செல்வனே, நாட்டையோ பகைவர் சூழ்ந்து கொண்டார்கள்; இனி நீ வாளா இருப்பது அழகல்ல. உனது தந்தையோ இறந்து பட்டான். ஆதலின் நீ போர்க்குப் புறப்பட வேண்டும்". எனலும்: தாய் கூறியதை ஊற்றுக் கேட்டிருந்த அப்பன்னிரு வயதுடைய பாலகன் "எந்தாயே! யான் போர்க்குச் செல்வதற்குப் பின்னிட்டேனென்றருளலை. தந்தையோ இறந்து பட்டார் சிறியேன் போரிற் சென்று பரகதி அடைவேனாயின் நின் வாழ்வு நிலையென்னும் என்று அலமருகின்றேன். ஆதலால் எந்தாயே நீ விரும்பியதைக் கூறுதி" என்று சொன்னான். உடனே அது கேட்ட அன்னை "மகனே! நீ ஒன்றற்கு மஞ்சவேண்டாம் போரிற் சென்று புகழுடன் மீழுதி" என்று போர் அணிகலன்களைத் தன் மகனிற் கிட்டு உடைவாளைக் கையிற் கொடுத்து விடுத்தனளாயின் அன்னாள் வீரமென்னே! பத்துத் திங்கள் வயிற்றில் வைத்துப் பரிந்து காத்து வளர்த்த ஓர் தாயானவள் தன் பிள்ளையைப் போருக்கு அனுப்புவாளா? மேற்போந்தவற்றை செய்யுட்களால் விளங்க வைக்கின்றேன்.

"சேயுறு வாட்டங்கண்டு செல்வத்தாய் மகன்பாற் சென்றே
ஆயதோர் வாட்டமென்ன அறைகுவா யப்பாவென்று
தாயெனுங் கருணையாலே தழுவியே கேட்கமைந்தன்
தூயகண்ணீர் தோற்றாமல் சொல்லுவான் விள்ளுவானே"(1)

"அன்னையே என்னைப்பெற்ற அமுதமே அன்புமிக்க
உன்னையே விட்டுநீங்க உளமின்றித் திகைக்கின்றேன்யான்
அன்னதே யன்றிப்போருக் கஞ்சினேன் அல்லேன்சென்ற
பின்னையே உன்னுடம்பு பேணுவா ரிலரேயென்றான்"(2)

"கண்மணி கேளாய்கேளாய் கவலையென்பொருட்டுவேண்டா(ம்)
மண்மகிழ் வேந்தன்ஆணை மாண்புற கிடனென்றெண்ணி
உண்மகிழ் வோடுசெய்தே உயர்புக முடன்மீளென்று
பெண்மணி உரைத்தும்மைந்தன்பேதைபோல்வருந்தினனே"(3)

தற்காலையுள்ள பெண்கள் அச்சமே குடிகொண்டவர்களாக வன்றோ இருக்கின்றார்கள். வீரலக்குமியை அன்னார் வெறுத்துத் தள்ளுகின்றனர். மகவையோ! கணவனையோ! போர்க்கனுப்பப் பின்னிடுகின்றனர். என்னே! இன்னோர் அறிவீனம்.

தற்காலத்திலும் சீனா, ஸ்பெயின், அபிசீனியா முதலிய இடங்களிற் போர் நடைபெற்றபோது நாட்டு நன்மைக்காகப் பல பெண்மணிகளும் அச்சம் சிறிதுமின்றிப் போர்க்களம் புகுந்து யுத்தம் செய்தார்களெனப் பத்திரிகை மூலம் நாமறிகின்றோம்.

எம் தாய் நாடாகிய இந்திய தேசத்திலே பிறந்த சரோஜினிதேவி, கமலாதேவி போன்ற பெண்மணிகள் தற்காலை சுயராச்சியத்திற்காக எவ்வளவு வீரத்துடன் முயற்சி செய்கின்றார்கள். சுயராச்சியத்திற்காகத் தம் உயிரை விடவும் சித்தமுடையவர்களாக இருக்கின்றனர். ஆ! இவர்களல்லவோ வீரத்தாய்மார். ஆகையாற் பெண்மணிகள் யாவரும் வீரலக்குமியை உடையவர்களாய் எதற்கும் அஞ்சாது வாழ்ந்து புகழுடம்பை இப்புவியில் நிறுவிப் புலாலுடம்பை நீக்குவார்களாக!

சி. அரசரத்தினம் (180)
சைவ வித்தியாசாலை, உடுவில் தெற்கு.


## தமிழ் மஞ்சரி

(முதலாம் பாகம்)

[வித்தியாசாலைகளின் உபயோகத்திற்குரிய தேனப் பரீக்ஷா புத்தக சபையாரால் 3-3-36 ல் அங்கீகரிக்கப்பட்டது]

இந்நூல் செய்யுட்பாகம் வசனபாகமென இரு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட் பாகத்தில் தேசாபிமானம் பாஷாபிமானம் இலக்கியச் சுவை சொல்விற்பத்தி நீதி என்னுமிவற்றை விளக்கக் கூடிய இனிமையான செய்யுள்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வசனபாகத்தில் தெளிவான நடையில் இதற்காக எழுதப்பட்ட சிறந்த உரைநடைப் பாடங்கள் பதினைந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஆறும் வகுப்புக்குரிய இலக்கிய பாடமாகப் பல பாடசாலைகளில் உபயோகித்து வருகிறார்கள்.

விலை சதம் 50

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.


ஏரின் சிவபோகம் இங்கிவற்கே யென்னவுழ, வாரங்கொள் செய்கையர் தாள் வாரம்வைப்ப தெங்நாளோ.

# தமிழர் வீரம்

[ நா. சிவபாதசுந்தரம், தொல்புரம் ]

( முற்றொடர் )

## மகாத்மாகாந்தி

**கா**ந்தியும் ஓர் ஒப்பற்ற வீரனே! உண்மையே கொண்டொழுகும் உத்தமர். வாய்மையும் மெய்ம்மையும் அவரிடம் உண்மையோடு ஒன்றித்து இலங்குகின்றன. வாசகர்களே! இந்நாளிலே அஹிம்சா வீரமூர்த்தியாய்—உலகமுழுதும் பரவிய உயர் புகழாய்—பகைவரும் மெச்சும் பண்பினராய்—பாரதநாட்டின் தனிப்பெருந் தலைவராய் விளங்கும் வீரர் யார்?

"விடுதலை பெறுவீர் விரைவாக நீர்
வெற்றி கொள்ளுவீர் என்று உரைத்து எங்கும்
கெடுதலின்றி நந்தாய்த் திருநாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சி செய்கின்றான்;
சுடுகலும் குளிரும் உயிர்க்(கு)இல்லை
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்(கு) இல்லை;
எமினே அறப் போரினை என்றான்
எங்கோ மேதகம் எந்திய காந்தி."

என்றும் பாரதியார் மகிழ்ந்து பாடி நின்றவர் மகாத்மா காந்தியடிகளன்றோ!

தென் ஆபிரிக்காவில் அங்குள்ள இந்திய மக்கள் உரிமைக்காகச் சாத்வீகமுறையில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்திய போது அவர் அடைந்த கஷ்டநஷ்டங்களை அளவிட்டுக் கூறமுடியாது. எத்தனை முறை அவருடைய உயிருக்கு ஆபத்துக்கள் ஏற்பட்டன. நமது அடிகள் தமது இளமையில் அன்னையிடம் பொய் கூற அஞ்சி தீச்சார் பால் மேற்கொண்டிருந்த புலாலுண்ணலை ஒழித்தார். இங்கிலாந்திலிருந்த காலத்திலும் தமது அன்னைக்குத் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டி நண்பர்களின் சினத்திற்கு அஞ்சாமல் மாமிச விருந்தை விட்டு எழுந்து சரேலென வெளியேறிச் சென்றார்.

"ஆரங் கண்டிகை ஆடையுங் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீர மென்னால் விளம்புந் தகையதோ"

என்ற சேக்கிழார் வாக்கின்படி இன்று இவ்வுலகில் பிரகாசிப்பவர் நம் அடிகளேயன்றோ. கந்தைக்கதர்; கண்ணீர் முத்தாரம்; ஈசன்பணி; தாய்த்தொண்டு; ஈர அன்பு; நலிந்தோர் நட்பு ஆகிய இப்பண்புகள் எல்லாம் விண்மீன்கள் போல் விளங்குகின்றன.

எங்களை அன்னியர் மிக்க கேவலமான நிலையில் கருதினார்கள். இப்போது அவ்வெண்ணம் எரியிற் பஞ்சு போலாகிவிட்டது. காரணர் யார்? நம் மகாத்மாகாந்தி அல்லவா! அறியாமையிலும் அச்சத்திலும் அமிழ்ந்து கிடந்த இந்தியர்களைத் தட்டியெழுப்பி சுதந்தரத்திற்காக எத்தகைய தியாகம் செய்யக்கூடிய நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டார் அல்லவா? இதனால் அல்லவா இம்மகானை இவ்வுலகம் போற்றுகிறது. அன்னார் எவ்வித ஆயுதமும் இன்றி மிக்க வல்லமை கொண்ட பிரிட்டிஷ் சக்கிராதிபத்தியத்தை 'அஹிம்சா' கொள்கையுடன் எதிர்த்ததைக் கண்ட உலகமே பிரமித்துவிட்டது. இத்தகைய தியாகமூர்த்தியை பாரத தேவி அடையப்பெற்றதுமோர் அதிஷ்டமே யெனலாம்.

## விவேகானந்த சுவாமிகள்

இவரும் ஓர் ஒப்பற்ற வீரன். அடிமைத்தனத்தை வேர் அறுத்த சுதந்திரப் புருடர், நல்ல தீர்க்கதரிசி, மேலான ஞானயோகி, இவர் இந்தியாவின் பெருமைகளை அயல நாட்டவர்களுக்கு விளக்கி இந்தியாவை மதிக்கச் செய்தவர். நாம் தமிழர். நம் சமயம் சைவ சமயம். இச்சமயமே மெய்ச்சமயம் என்று அமெரிக்கர் மதிக்கச்செய்தவர் இவரே. இந்தியரைக் கேவலமாய் மதித்த அமெரிக்கர்கள் சுவாமிகளின் உற்சாகமும், ஊக்கமும், உணர்ச்சியும் உண்டாக்கிய பிரசங்கத்தின் பிறகுதான் இந்தியரை மதிக்க ஆரம்பித்தனர். இவரின் அழகான, ஆவேசமான பிரசங்கத்தின் பின் அமெரிக்க ஐரோப்பியர் சிலர் சுவாமிகளுக்கு சீடரானார்கள். ஆ! வாசகர்களே! இந்த அமெரிக்கர்களை சுவாமியவர்கள் என்ன ஆயுதம் கொண்டு தனது தொண்டர்களாக்கினார். கூறுங்கள்? துப்பாக்கியா? பீரங்கியா? வெடிகுண்டா? இல்லை. உண்மை என்னும் உயரிய ஆயுதம் கொண்டல்லவோ சீஷர்களாக்கினார். பாருங்கள் அவரின் வீரத்தை! இன்னும் அங்கு ஓர் இந்துமத ஆலயத்தையும் கட்டுவித்தார். ஆ! என்னே! சுவாமிகளின் பெருமை! என்ன சொல்லுவது! சமணர்களை வாதில் வென்ற ஞானசம்பந்தனே! அல்லது புரவலனுடன் புன்மொழி புகன்ற நாவுக்கரசனே!! அல்லது குருந்த மரத்தடியில் குரு உபதேசம் பெற்ற மணிவாசகனே!!! என்றே கொள்ளவேண்டும்.

சுதந்தரமிழந்து செல்வமின்றி பெருமை கெட்டு அடிமையிற் கிடந்த இந்தியரை விளித்து எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும்வரை உழைமின்! அறிமின்! என்று தட்டி எழுப்பியவரும் சுவாமியவர்களே. வாசகர்களே! பாருங்கள்! இவரின் தோற்றத்தை; வசீகரமுகத்தை; கம்பீரக் கருணைக் கண்களை; அஞ்சா நெஞ்சை; திண்தோளை. இவரின் திருவுருவப்படத்தை நோக்கியவுடன் உங்கள் மனதில் உங்களை அறியாமல் வீரம் எழுப்பவில்லையா? காரணம் என்ன? வீரத்தின் திரண்ட உருவம் அல்லவா அவரின திருவுருவம்.

(தொடரும்)

**திருமாவளவன்**

1939-ம் ஆண்டு கனிஷ்டபாடசாலைத் தராதரபத்திரவகுப்புக்கு இலக்கிய பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

விலை சதம் 50

தனலக்ஷுமி புத்தகசாலை, சுன்னாகம்.

பித்தரென மயன்றறிந்து பேதைபோல் அதனப்பு, வித்த தமிழசமந்தர் மெய்புகழ்வ தெந்நாளோ.

# அதிஷ்டம் அளித்தவர்

அந்தக் கிராமத்தில் இருந்தது நாற்பது ஐம்பது குடிசைகள்தான். இரண்டு மூன்று வளவுகளுக்கு ஒவ்வொரு குடிசை. குடிசைகளுக்கு வடக்குப்புறம் ஒரே நெல்வயல்கள். வயலண்டை நின்று இன்னும் வடக்கே நோக்கினுல் சில மலைத்தொடர்கள் தெரியும். கொஞ்சம் கிழக்குப் புறமாகக் கிராமத்திற்குச் சற்றுத் தூரத்தில் பறைச்சேரி இருந்தது.

இரவு பத்துமணியிருக்கும். அன்றுமாலை 7 மணி வரையும் முருகனுக்கு ஓயாத வேலை. பதைத்துப் பதைத்து அந்த வெயிலில் வேலைசெய்து கொண்டிருந்தான். பாவம்! சுமை இழுத்த மாட்டுக்கும் அவனுக்கும் வித்தியாசமே கிடையாது. அந்த வருஷம் நெல்விளைவு மிகவும் குறைந்துபோயிருந்தது. முருகனுக்கு அன்றைக்குச் சம்பளமாகக் கிடைத்தது ஒரே ஒருபடி நெல்லுத்தான். ஐயோ! பாவி! அந்த ஒருபடி நெல்லைக்கொண்டாவது எல்லோருமாக அரைவயிற்றுக் கஞ்சியாவது குடித்திருக்கலாம். இளைக்க, இளைக்க உளைத்தபொருளைக் கள்ளுக் கடைக்குக் கொடுத்துவிட்டானே பாவி!

தள்ளாடிக்கொண்டே பத்துமணிக்கெல்லாம் வீட்டிற்கு வந்தான் முருகன். வள்ளி குடிசைக்கு வெளியில், முருகனுடைய வரவை எதிர்பார்த்திருந்தாள். முருகன் கொண்டுவரும் நெல்லை இனியாவது சரிப்படுத்திப் பிள்ளைகளின் பசிக்கொடுமையைத் தணிக்கலாமென்று எண்ணியிருந்தாள் அவள். பாவம்! அவள் எண்ணத்தில் மண் விழுந்தது! முருகன் வள்ளியைப் பார்த்தான். வள்ளிக்கு விஷயம் புரிந்து விட்டது. என் செய்வோமென்று தலையில் அடித்துக் கொண்டாள்.

"கஞ்சி கொண்டாடி!" என்முன் முருகன் தள்ளாடிக்கொண்டே.

"கஞ்சி ஏது? நீ நெல்லுக் கொடுத்தால் தானே" என்றாள் வள்ளி. "நான் கொடுக்கவியலுமாடீ! மூதேவி நாயே! நீ என்னடி செய்கிறாய்!" என்று கூறிக்கொண்டே அவள் மயிரைப் பிடித்திழுத்துக் கொண்டு "பளீர், பளீர்" என்று இரண்டு அறை விட்டான். "ஐயோ! ஐயோ! என்னைக் கொல்றியே!" என்று கூச்சலிட்டாள் வள்ளி.

முருகனுக்குக் கோபம் தணியவில்லை. பக்கத்திலிருந்த ஏதோ ஒரு கலயத்தைத் தூக்கி நிலத்தில் வீசினான். அந்த மட்கலம் சுக்கல் சுக்கலாக உடைந்து போயிற்று. அய்யய்யோ! அந்த உடைந்த துண்டொன்று பக்கத்திலிருந்த குழந்தையின் மீது பட்டுவிட்டது! பாவம்! குழந்தை! வீறிட்டலறி மூர்ச்சையாகி விட்டது. முருகனே குடிமயக்கத்தில் போய்ப் படுத்துக்கொண்டான். வள்ளிக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. மூர்ச்சையான குழந்தைக்குக் கொஞ்சத் தண்ணீர் தெளித்துப் பார்க்கலாமென்றால், எவ்வளவோ பாடுபட்டு வாய்க்காலில் அள்ளிவந்த மண்டி நீர் இருந்த, கலயத்தைத் தானே முருகன் உடைத்து விட்டான்! வள்ளி, கிரா

## தர்மம் வெற்றியடைகிறது

(195-ம் பக்கத் தொடர்ச்சி)

வது முழுவதும் பொய்" என்று தர்மபாலனின் தந்தையார் கூறினர். ஆசிரியர், "அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" எனக்கேட்டார். "எங்கள் சந்ததியார் தர்மசீலர்கள். அதர்மத்தையறியாதவர்கள். எங்கள் கிராமத்திற்குமே தர்மபால கிராமமென்று பெயர். இதுவரை ஒருவராவது இளம் வயதிலே இறந்ததில்லை. வயதுவந்ததன் பின்பே இறப்பார்கள்" என்று அவர் கூறினர். இவர் மாத்திரமல்ல இன்னும் பலரும் இப்படியே கூறினர்கள். "நாம் தீவினை செய்வதன் பயனாலேதான் துன்பத்தை யடைகிறோம். இவர்கள் நல்வினை செய்கிறதனாலேதான் இன்பத்தையடைகிறார்கள். நாமுமப்படியிருந்தாலென்ன? என்று பலவாறு ஆசிரியர் நினைத்தார். தான் பொய் சொன்னதற்கு மிகவும் வருந்தி மன்னிப்பும் பெற்றுக் கொண்டார்.

ஆசிரியர் அன்று தொடங்கியே தீவினைகளை ஒழித்தார். நல்வினைகளைச் செய்தார். தனது தேசம் சென்று, தர்மபாலனைத் தன் குருவென்க் கொண்டு தர்மத்தை நிலைநாட்டினன்.

---

ஈழகேசரி கல்வி அனுபந்தம்
தனிப்பிரதி விலை சதம்—3
25 பிரதிகள் விலை சதம்—50
தபாற் செலவு வேறு
ஆண்டுச்சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது

---

மத்திற்கு ஓடிப்போனாள். அங்கே ஒரு பிராமணரிடம் கொஞ்ச நீர் கொடுக்கும்படி கேட்டாள். அவருக்கு அசாத்தியகோபம் பிறந்தது. "மூதேவி நாயே! இந்தநேரத்தில் வந்தாயா. நீருக்கு? கழுதை! பேசாமல் போடீ" என்றார். வள்ளி எவ்வளவோ கெஞ்சினாள். ஐயர் அசைவதாய் இல்லை. அவள் அதற்கு மேலும் மிகவும் மண்டாடினாள். அதற்குமேல் அவளுக்குக் கிடைத்தது நாலைந்து பலமான அடிகள் தான். அந்தக்காலம் எல்லாம் இப்போது போய்விட்டது. அதோ! அந்தக் கிணற்றில் நின்று குடத்தில், நீர் அள்ளுபவள் தான் வள்ளி. அதோ! உல்லாசமாகப் பாடிப்பாடி வேலை செய்கிறான் முருகன். அதோ! சேரிக் குழந்தைகள் எல்லாம் சந்தோஷமாக விளையாடிக்கொண்டிருக்கின்றனர். இவ்வளவிற்கும் காரணம் யார் தெரியுமா? 'சென்னைச் சட்டசபைப் பிரதமமந்திரி ஸ்ரீ ச. ராஜகோபாலாச்சாரியார்' அவர்கள்தான். அவர்தான் மதுவை ஒழித்தார். அரிசனங்களுக்கு நல்லநீர்க் கிணறுகள் வெட்டுவித்தார். அவர்களுக்கு விடுதலை அளித்தார். சந்தேகமென்ன? அவரே அந்தச் சனங்களுக்கு அதிஷ்டம் அளித்தவர்.

(154) ச. வரதராசன்
பொன்னாலை,

# நன்றி மறவேல்

ஒளவை மூதாட்டியாரால் கூறப்பட்ட நீதிவாக்கியங்களுள் மேற் கூறியதும் ஒன்றாகும். இதன் பொருள் யாதெனில் ஒருவர் நமக்குச் செய்த நன்றியை மறக்கலாகாது என்பதே.

இந்த ஞாலத்தின் கண்ணே மனிதர்களாய்ப் பிறந்த யாவரும் ஒருவர்க்கொருவர் உதவியின்றி வாழமுடியாது. தனக்கு ஒருவருடைய உதவியும் அவசியம் இல்லையெனக் கருதும் பெரும் செல்வந்தனும் பிறர் உதவியைத் தேடவேண்டிவரும். மேலும் நமக்கு ஒருகால் நன்மை செய்தவர், பின்னும் பல தீமைகள் செய்தபோதிலும் அத்தீமைகளை மறந்து நன்றியை மறவாது இருதயத்திலிருத்தி ஏற்ற சமயங்களில் அவருக்கு உதவிபுரிய வேண்டும். இதை வற்புறுத்தியே,

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று."

எனத் தெய்வப்புலவரும் திருவாய் மலர்ந்திருக்கின்றனர். அவ்விதம் பிறர் செய்த தீமையை மறந்து, அவருக்கே நாம் திரும்ப நன்மை செய்வோமானல், அவர்கள் தம் குற்றத்தை யூகித்தறிவதோடு நற்புத்தியும் அறியக்கூடும். சூரியன் தாமரைப் பூவை மலரச் செய்கின்றான். யாசிக்காமலே மேகங்கள் மழையைப் பொழிகின்றன. அவ்வாறே சான்றோர் பரோபகாரத்தைக் கடைப்பிடித்து, தம் சரீரத்தையும் கவனியாது முற்றும் பிறர்க்கு உதவிபுரிதலிலேயே கழிப்பர். இவ்வித செய்கைகளை நாம் ஒரு மரத்திலிருந்தும் அறியலாம். எவ்வாறெனில், சில மனிதர்கள் கூடி ஒரு பெரிய விருட்சத்தை வெட்டத் துவக்கி அதனைச் சிறிது பாகம் தறித்ததன் பின் தாமடைந்த களைப்பை ஆற்றிக் கொள்ளுமாறு அவர்கள் மரத்தின் நிழலிலே தங்குகின்றனர். அப்போது அவ்விருட்சம் அவர்களைத் தனக்குப் பொல்லாங்கிழைப்பவரெனப் பொருட்படுத்தாது தன் நிழலின் குளிர்ச்சியை அளிக்கின்றதன்றோ? அவ்வாறே பெரியோர்களும் தமக்குக் கெடுதி செய்ய முயலுபவர்களுக்குத் தாம் நன்மையே செய்வர். இதைக்கருதியே

"சார்ந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆர்ந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்."

என்று ஒளவையார் வெளியிட்டிருக்கிறார்.

"எந் நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம், உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு."

என்றபடி எவ்வகைத் தருமங்களை அழித்தவர்களுக்கு மீடேறும் வழியுண்டாம். இச்செய் நன்றியை மறந்தவர்களுக்கு ஈடேறும் வழியில்லை. கேவலம் மரங்கள் கூட ஒருவர் செய்த நன்றிக்குப் பதில் நன்மை செய்கிறதெனப் பெரியோர்கள் கீழ் குறித்தவாறு அருளியிருக்கின்றனர்.

"நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங் கொலெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருதலால்."

மேலும்:—

"தினைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாகக்
கொள்வர் பயன் றெரிவார்."

என்னும் ஆன்றோர் வாக்கின்படி பிறர் செய்யு முதவி தினையளவாயினும் அதை நல்லவர்கள், பனையளவாய்க் கொண்டு என்றும் மறவாது பிரதி உதவியைச் செய்ய முயலுவர். தீயோர்கள் பிறர் செய்த உதவி பனையளவினதாயினும், (ஈரமில்லார் நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம் நீர் மேல் எழுத்துக்கு நேர் என்பதற்கிசைய.) அதைத் தினையளவேனும் மதியாது உடனே மறப்பர்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

என்றும்,

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றலரிது."

என்றும் பெரியோர்கள் கூறுகின்றனர்.

ஆதலின் இவைகளைச் சிந்தித்து இவைகளுக்கேற்ப நாம் பிறருக்கு ஏற்ற சமயங்களில் தக்க உதவி புரிய வேண்டும் என்பதே ஒளவைப்பிராட்டியாரது ஆழ்ந்த கருத்தென வுன்னி, நாம் நம்மாற் கூடுமானவரை பரோபகார சிந்தனையைக் கடைப்பிடித்தொழுகுவோமாக.

வ. தினகரம்பிள்ளை
J. S. C. வகுப்பு
தட்டாதெருப்பாடசாலை

வெளிவந்துவிட்டது!
வெளிவந்துவிட்டது!!

விசாகப்பெருமாளையரவர்கள்
இயற்றிய

அணியிலக்கணம்

(திருத்தமான பதிப்பு)

விலை சதம் 35.

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

ஓட்டுடன்பற் றின்றி உலகைத் துறந்தசெல்வப், பட்டினத்தார் பத்திரகிரி பண்புணர்வ தெந்நாளோ.

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

## ஓர் பெரிய நற்செய்தி

குழந்தைகளே !

எல்லாரும் மகாநாடு மகாநாடென்று ஆவலாக இருந் தீர்களல்லவா! அந்த மகாநாடு வருகிற 22 ம் தேதிக்கு வைக்கலாமென்றுதான் நான்முன்னர் யோசித்தது. ஆனல் எனக்கு வந்த கடிதங்களிலிருந்தும், ஆசிரியர்கள் பலர் முறையீட்டினின்றும், எங்கள் பத்திராதிபர் புறு புறுப் பினின்றும்" நான் இந்தத் திகதியைக் கொஞ்சம்போல் பின்போட நேரிடுகிறது. மகாநாட்டுக்குப் பெரியமனிதர் பிரசன்னமாயிருக்கவும், ஆசிரியர் தங்கள் மாணவர்களு டன் சௌகரியமாக வந்து போகவும், 'கல்விமலர்' நல்ல முறையில் பிரசுரிக்கவுமே நான் எங்கள் மகாநாட்டை வருகிற மேமீ 20-ந்திகதி சனிக்கிழமை வைக்கத் தீர் மானித்துவிட்டேன். இந்நாள் எல்லாருக்கும் வசதியைக் கொடுக்கு மென்பது தான் என் நம்பிக்கை. பாட்டி யும் அதேவிதந்தான் சொல்கிருள்! உங்கள் யோசனை யென்ன ?

ஆகையால் நீங்கள் இனிமேல் கவனிக்கவேண்டிய வை இவைகள்:

1 'கல்விமல'ருக்கு கட்டுரை, கதை, படங்கள், முத லியன அனுப்பும் கடைசித்தேதி 5-5-39.

2 மற்றும் மகாநாட்டுக்குப் பண உதவி முதலியனவும் அத்தேதிதான் கடைசிநாள். கண்டிப்பாய்க் கடைசி நாள்.

'கல்விமலர்' விஷயத்தில் தாத்தாவுக்கும் பத்திராதிபருக் கும் பெரியபோட்டி ஏற்பட்டிருக்கிறது. தம்முடைய 'ஆண்டுமடல்' தான் சிறப்பாயிருக்குமென்கிருர் பத்தி ராதிபர். நான் எங்கள் 'மலர்' தான் சிறப்பாயிருக்கு மென்கிறேன்! இதைப்பற்றியூ தீர்மானம் கொடுப்பது நீங்கள்தான். அடுத்தவாரம் ஈழகேசரி ஆண்டுமடல் வெளிவரும். ஒரு மாதத்துக்குப்பின் 20-5-39-ல் எமது கல்வி 'மலர்' வெளிவரும். இரண்டையும் வாங்கிப் படித்து உங்கள் தீர்ப்பைச் சொல்லுங்கள் பார்க்கலாம்!

இந்த வருஷம் கடைசியாக நான் உங்களோடு பேசு வதற்கு இன்றுதான் ஒரு சந்தர்ப்பம். அடுத்தமுறை நான் உங்களைச் சந்திக்கும்போது பிரமாதி வருஷமாகிவி டும்! இரண்டு வாரமாவது நான் ஓய்வெடுக்க எண்ணியிரு க்கிறேன். உங்களுக்கும் ஒரு ஆறுதலாக இருக்கட்டும். புதுவருஷம் பிறந்தவுடன் தாத்தாவுக்கும் பாட்டிக்கும் கடிதமெழுதுங்கள்.

என்பேராலும் பாட்டியின் பேராலும் எங்கள் அரு மைப்பேரன் பேத்திகள் சகலருக்கும் ஆசிர்வாதங்களைக் கூறுகின்றேன்.

தாத்தா

### தாத்தாவின் பதில்

த. ராதாரத்தினம்:—விஷயம் கிடைத்தது. முத்திரைக ளும் கிடைத்தன. மலர் வெளியானதும் அனுப்பப்படும். பாட்டிக்கு இப்போது கொஞ்சம் சுகம். வருஷக் கொண்டாட் டத்துக்குப் புறப்புடவை கட்டுவதற்காகவாவது பாட்டிக்குச் சுகம் வாராதா?

ஆ. சோமசுந்தரம்:-உமதெண்ணப்படி விஷயத்தைப் பேச லாம்.

S. ஆறுமுகம் (184):—சென்றவாரம் நான் பதில் தெரி வித்துவிட்டேன். முத்திரைகள் பெற்றுக்கொண்டோம். 'கல்வி மலர்' உமக்காக 'ரிசேர்வ்' செய்யப்படும்.

க. சுப்பிரமணியம் (253):—உம்மைச் சேர்த்திருக்கி ருேம். கட்டுரை பிரசுரிக்க இவ்வாரம் இடம் கொஞ்சம் மத் திமமாகையால் அடுத்த தடவைகளில் பார்த்துக் கொள்ள லாமா?

சே. முருகானந்தன்:—கடிதம் பார்த்துக்கொண்டேன். மற்றும் விபரங்களுக்கு அடுத்த பத்திரிகை பார்க்கவும். புது வருடத்திற்கு எங்கள் ஆசீர்வாதங்களைப் பெறக்கடவீர்.

நா. கார்த்திகேசு (172):—பழையபடி தோற்றப்பட்டு விட்டீரா? எங்கே யென்றல்லவா பார்த்தேன். பிரவேச பரீ க்ஷையில் சித்தியெய்துவீரென்றே நம்புகிறேன். பழைய முத் திரைகளை வைத்திருக்கும் S. சிவபாதம், மூளாய் பார்க், மானிப்பாய்-என்ற விலாசத்திலிருக்கும் அங்கத்தவருடன் கடி தப் போக்கு வரத்துச் செய்தால் உமது முத்திரைகளை மாற்றி யுபயோகித்துக் கொள்ளலாம். தங்கச்சியிடம் அவையெல்லாம் பாட்டிக்குதவாதென்று சொல்லிப்போடவும். சந்தோஷம்.

வி. குமாரசுவாமி (248) பாட்டுக் கிடைத்தது, 'மலர்' விஷயம் எனது இன்றைய கடிதத்தில் பார்க்கவும்.

த செல்வத்நம்பி (213) பேச்சுப்போட்டியில் எத்தனை யோபேர் சேர்ந்திருக்கிருர்கள். இதற்கான நிபந்தனைகள், விப ரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும். விஷயம் நல்ல விஷயந் தான்.

நா. சிவசுப்பிரமணியம், (3) பரீக்ஷையில் சித்தியெய்தி யது பாட்டிக்குத்தான் அதிக சந்தோஷமாயிருக்கிறது!

சே சிவனடியான், (249) விஷயங்களெல்லாம் பார்வை யிடப்படுகின்றன. சித்திரப் படங்கள் வரையலாம். எனது இன் றைய கடிதத்தைப் பார்க்கவும்.

ஆ. நன்னித்தம்பி, (246) தம்பி, கட்டுரை ஒவ்வொரு பக்கமாகத்தான் எழுதவேண்டும். கடுதாசியின் இரண்டு பக்கத் திலும் எழுதப்படாது. இவ்வாரம் இடமில்லை.

ம. க. நடராசா. (230:):—புதிய பேரன்மாரில் பாட் டிக்குப் பெரிய அன்புதான். குடும்பம் பெரியதல்லவா?

### புதிய அங்கத்தவர்

253. க. சுப்பிரமணியம் 254. அ. நடராசா.

புதுப்பித்த அங்கத்தவர்...எண் 1.

### கல்வி மகாநாடு நிதி.

சி. ஆறுமுகம் (கொக்குவில்) ... 50 சதம்.

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னுகம் 'தலையாட்டிலுள்ள' திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஆண்டு ஏப்பிரல் மீ 9உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.